தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 97ஆவது வாரியக் கூட்டம் தலைமைச் செயலகத்தில், நாமக்கல் கவிஞர் மாளிகை 5ஆவது தளத்திலுள்ள கூட்டரங்கில், அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது. உடன் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

அரசினர் பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில் –

அமைச்சர் மா.சுப்பிரமணியனுடன் - மொரிசியஸ் நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் சந்திப்பு!

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் மருத்துவத் திட்டங்களைக் கேட்டறிந்தார்!

சென்னை, செப்.30-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியனை அவர்களை நேற்று (29.09.2025) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், மொரிசியஸ் நாட்டின் வெளியுறவு துறை, பிராந்திய ஒருங்கிணைப்பு மற்றும் மொரிசியஸ் குடியரசின் சர்வதேச வர்த்தக துறை அமைச்சர் ஹம்பிராஜன் நரசிம்ஹென் (Hambyrajen Narsinghen) ஆகியோர் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், உயர் மருத்துவ சிகிச்சைகள் குறித்த பயிற்சி, மருந்து கொள்முதல், இந்திய மருத்துவத்தில் தயாரிக்கப்படும் மருந்துகள் மற்றும் மருத்துவ முறைகள், மருத்துவ சுற்றுலா போன்ற மருத்துவ தேவைகள், வசதிகள் மற்றும் கட்டமைப்புகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து கட்டுப்பாட்டுத்துறை ஆணையர் லால்வேனா, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதிதுறை ஆணையர் திருமதி.விஜயலட்சுமி, தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்க திட்ட இயக்குநர் திருமதி.சீதாலட்சுமி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு. சோமசுந்தரம், மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சித்ரா, சென்னை மொரீஷியஸின் கௌரவ தூதர் மலையப்பன் நாகலிங்கம் மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

கே.பி.சொக்கலிங்கம் எம்.சி, முன்னிலை! கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, தலைமை! திருவொற்றியூர் நகர

முன்னாள் அவைத் தலைவர், மிசா கே.பரசுராமன் 33 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, – கலாநிதி வீராசாமி எம்.பி., புகழஞ்சலி!



சென்னை, செப்.30-

கடலோர கிராமங்களில் கருப்பு சிவப்பு இருவண்ண கொடியை உயர்த்தி பிடிப்பதையே லட்சியமாக கொண்டு வாழ்ந்து மறைந்த முன்னாள் திருவொற்றியூர் நகர கழக அவை தலைவர், மூன்று முறை நகராட்சி மன்ற உறுப்பினர், முத்தமிழ் அறிஞர் அய்யா கலைஞர் அவர்களால் மீசைக்காரர் என்று அழைக்கப் பட்ட மிசா கே.பரசுராமன் அவர்களின் 33 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று (30.09.2025) காலை 10.00 மணியளவில் தியாகச்சுடர் கே.பரசுராமன் நினைவு கலையரங்கம் அருகே 5 வது வட்ட கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர் கே.பி. சொக்கலிங்கம் முன்னிலையில், மாநில மீனவரணி துணை தலைவர் கே.பி.சங்கர் தலைமையில் நடைபெற்ற உள்ளது.

நினைவில் வாழும் கே. பரசுராமன் அவர்கள் அய்யா கலைஞர் அவர்களின் மீதும், கழகத்தின் மீதும் தீராத பற்று கொண்டவர். அய்யா கலைஞர் அவர்களின் முரட்டு பக்தனாகவே வாழ்ந்து வந்தார். மீனவ பகுதியில் கழகத்தை வளர்த்தவர்களில் முதன்மையானவர். கே.பரசுராமன் அவர்கள் கழகம் அறிவித்த அனைத்து ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் என அனைத்திலும் கலந்து கொண்டவர். மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்.

இவருக்கு கே.பி.பி. சாமி, கே.பி.சங்கர், கே.பி. இளங்கோ, கே.பி.சொக்கலிங்கம் என நான்கு மகன்கள் உள்ளனர். கே.பி.பி. சாமி அவர்கள் இரண்டு முறை திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், 2006 2011 ஆம் ஆண்டு வரையிலான மாண்புமிகு அய்யா கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் மீன்வளத்துறை அமைச்சராக இருந்தவர். கே.பி.சங்கர் அவர்கள் தற்பொழுது கழக மாநில மீனவரணி துணை தலைவராகவும், திருவொற்றியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும் உள்ளார். கே.பி.இளங்கோ தனியார் தொழிற்சாலையில் பணிபுரிந்தவர், கே.பி.சொக்கலிங்கம் ஒரு முறை திருவொற்றியூர் நகராட்சி மன்ற உறுப்பினராகவும், தற்பொழுது சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் உள்ளார்.

இந்த புகழஞ்சலி நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, தொகுதி பார்வையாளர் டி.நகர் மோகன், பகுதி கழக செயலாளர்கள் தி.மு.தனியரசு, ஏ.வி.ஆறுமுகம், வை.ம. அருள்தாசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி. ராமநாதன் ஆகியோர் கலந்துகொண்டு புகழஞ்சலி செலுத்துகின்றனர்.

இந்நிகழ்வில் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி வட்ட கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் அய்யா கலைஞர் அவர்களின் உடன்பிறப்புகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்து மாறு தியாகச்சு டர் கே.பரசுராமன் அவர்கள் குடும்பத்தினர் சார்பில் அன்புடன் கேட்டுக்கொள்கின்றனர்.

மாதவரம் வடக்கு பகுதி 15, 16வது வட்டங்களுக்கு உட்பட்ட மணலி புதுநகர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் புதிய ட்ரான்ஸ்பார்மர்கள் அமைக்க கோரி மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தலைமையில் பொதுமக்கள் நாபாளையம் மின்வாரிய உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர்களிடம் கோரிக்கை மனுவை கொடுத்தனர். எஸ்.கோபாலகிருஷ்ணன், எல்லமுத்து பி.டி.ரவிச்சந்திரன், பத்மநாபன், மணலி புதுநகர் சி.எம். ராஜா, எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், கடப்பாக்கம் மகேஷ்குமார், சாம்ராஜ், ரூப்குமார், ஏசுராஜ் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.

தி. மு. க. தொழிலாளர் அணி

மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி, மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. தொழிலாளர் அணியின் விழுப்புரம் தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் மற்றும் தென்மேற்கு மாவட்ட தலைவர் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

விழுப்புரம் தெற்கு மாவட்டம்

தலைவர் - **வே. அரிகரன்** 96, ரெட்டிக்குப்பம் ரோடு, விக்கிரவாண்டி அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம் - 605652, விழுப்புரம் மாவட்டம்.

துணைத் தலைவர் - சா. ராமன் மாரியம்மன் கோவில் தெரு, காங்கேயனூர் மற்றும் அஞ்சல், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

அமைப்பாளர் - தா. பூபதி 124/178, நேதாஜி தெரு, என். ஜி.ஜி.ஓ.நகர், திருக்கோவிலூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. ரமேஷ் பள்ளிக்கூடத் தெரு, சிறுவாக்கூர், கல்பட்டு அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 2) என்.பி.ஆர். சிவகுமார் பிள்ளை மேற்கு தெரு, சி. மெய்யூர் அஞ்சல், திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 3) எஸ். பிரசாந்த் 1/92, தெய்வீகன் தெரு, மணம்பூண்டி அஞ்சல், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 4) இர. கார்த்திகேயன் 228, காமராஜர் ரோடு, அரகண்டநல்லூர், கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 5) டி.கே. செந்தில் குளத்து தெரு, ஆற்காடு, கண்டாச்சிபுரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 6) க. சித்தானந்தன் 256/4, 4வது தெரு, சித்தலிங்கமடம் குடியிருப்பு, திருவெண்ணெய்நல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 7) ஏ. சிவராஜ் மாரியம்மன் கோவில் தெரு, ஒட்டன்காடுவெட்டி, மாம்பழப்பட்டு அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம். 8) அ. அருள் முருகன் 2, ஆசாரி தெரு, வாக்கூர் மற்றும் அஞ்சல், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

சென்னை தென்மேற்கு மாவட்டம்

சென்னை தென்மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் மு. பாலகுரு அவர்களுக்கு பதிலாக ஏற்கனவே தலைவராக நியமிக்கப்பட்ட **என்.வடிவேல்**, (7/8, சாரதாபுரம், கெனால் பேங்க் சாலை, மயிலாப்பூர், சென்னை - 600004.) அவர்கள் சென்னை தென்மேற்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளராகவும், **ஆ. ராஜேந்திரன்,** (24, ஆர்-பிளாக், பல்லக்குமான்யம், மந்தைவெளி, சென்னை - 28.) அவர்கள் தலைவராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 29-09-2025.

பிடிசி ஜி.செல்வராஜ்
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி

தி.மு.க. இளைஞர் அணி

முத்தமிழறிஞர் பதிப்பகம்

அரிய புகைப்படங்களை அனுப்புங்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75-ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, பல்வேறு அரசியல் இயக்கத் தலைவர்கள், எழுத்தாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எழுதும் கட்டுரைகள் அடங்கிய புத்தகம் ஒரு மகத்தான வரலாற்று ஆவணமாய், கழக இளைஞர் அணியின் சார்பில், நடத்தப்படும் முத்தமிழறிஞர் பதிப்பகம் வெளியீடாக வெளிவரவிருக்கிறது.

கழக இளைஞர் அணிச்செயலாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஆலோசனைக்குழு மற்றும் ஆசிரியர் குழு புத்தக உருவாக்கப்பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள். கழக மாநாடுகள், பேரணிகள், பொதுக்கூட்டங்கள், போராட்டங்கள், தி.மு.கழக இதழ்கள், வரலாற்றுச் சிறப்புவாய்ந்த அறிவிப்புகள், துண்டறிக்கைகள், சுவரொட்டிகள், சுவர் விளம்பரங்கள் தொடர்பான அரிய புகைப்படங்கள் உங்களிடம் இருந்தால், அவற்றை

தி.மு.க. 75 – அரிய புகைப்படங்கள்,
அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை,
சென்னை - 600 018.

என்ற முகவரிக்கு அனுப்பவும். muthamilarignar@gmail.com என்ற மின்னஞ்சலுக்கோ அல்லது 8807193390 என்ற வாட்ஸ்அப் எண்ணுக்கோ அனுப்பலாம்.

கலைஞர் 100 1924 - 2023

சிறுதுறைமுகங்கள் மூலம் 12 மில்லியன் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளது!

தனியார் முதலீட்டு துறைமுகங்கள் அமைக்க சாத்தியமான மாநிலம் தமிழ்நாடு!

அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

சென்னை, செப். 30 -

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின், 97ஆவது வாரியக் கூட்டத்தில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு துவக்கி வைத்து உரையாற்றுகையில், தனியார் முதலீட்டு துறைமுகங்கள் அமைக்க சாத்தியமான மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என்று குறிப்பிட்டார்.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 97ஆவது வாரியக் கூட்டம் இன்று (29.9.2023 தலைமைச் செயலகத்தில், நாமக்கல் கவிஞர் மாளிகை 5வது தளத்திலுள்ள கூட்ட ரங்கில், பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் 97ஆவது கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்பித்த பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் / தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் தலைவர் அவர்களையும், அனைத்து உறுப்பினர்களையும், துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வரவேற்று, உரை யாற்றினார்.

97ஆவது கடல்சார் வாரியக் கூட்டத்தை அமைச்சர் எ.வ. வேலு துவக்கி வைத்து, உரையாற்றுகையில்;

தமிழ்நாடு முதலமைச்சரின் தொலைதூரப் பார்வைக் கேற்ப, 2030 ஆம் ஆண்டுக்குள் ஒரு ட்ரில்லியன் பொருளாதார வளர்ச்சி அடைய கடல்சார் வாரியத்தின் பொருளாதார நடவடிக்கைகளின் மூலம் மாநிலத்திற்கு மிகப்பெரும் வருவாய் கிடைக்க வேண்டும். மேலும், இதன் மூலம் தமிழ்நாட்டின் GDP உயர்வதுடன் கூடுதலாக வேலை வாய்ப்புகளையும் உருவாக்க வேண்டும். சிறு துறைமுகங்கள் மூலம் வணிகம் மற்றும் சுற்றுலா வளர்ச்சிப் பெற வழிவகை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால், தமிழ்நாடு தொழில் முனைவோருக்கான முன்னோடி மாநிலமாக உள்ளது என்றும், இதன் அடிப்படையில் தனியார் முதலீட்டு துறைமுகங்கள் அமைப்பதற்கு மிகவும் சாத்தியமான மாநிலமாக தமிழ்நாடு உள்ளது என்று தெரிவித்தார்கள்.

தமிழ்நாடு கடல்சார் வாரியம் 1069 கிலோ மீட்டர் நீளக்கடற்கரை பகுதியில் சாத்தியமான இடங்களில் சுற்றுப்புறச்சூழல் மற்றும் மீன்பிடி வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படாமல் பல்வேறு சிறு துறைமுகங்களை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது என்று தெரிவித்தார்.

ஒன்றிய அரசின் சாகர் மாலா திட்டத்தின்கீழ், கடலூர் துறைமுகத்தை மேம்படுத்தி 37 ஆண்டுகளுக்குப் பிறகு, தற்போதுதான் அதை இயக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. விவேகானந்தர் பாறை மற்றும் அய்யன் திருவள்ளுவர் சிலையை இணைக்கும் கண்ணாடி பாலம், பொது மக்களின் பேராதரவை பெற்றுள்ளது. இதுவரை பல இலட்சம் சுற்றுலா பயணிகள் பார்வையிட்டுள்ளனர்.

இராமேஸ்வரம் - தலைமன்னார் பயணிகள் கப்பல் போக்குவரத்தைத் தொடங்க கருத்துருக்கள், ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டு, நிதியுதவி கோரப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் கூறி னார்கள்.

2024-2025 ஆம் ஆண்டில், தமிழ்நாடு கடல்சார் வாரியக் கட்டுப்பாட்டிலுள்ள சிறுதுறைமுகங்களில், 12 மில்லியன் டன் சரக்குகள் கையாளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

தமிழ்நாடு கடல்சார் வாரியம் மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளுக்கு, அனைத்து உறுப்பினர்களும் முழு ஒத்துழைப்பை நல்குமாறு, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் அவர்களின் தொடக்கவுரையை தொடர்ந்து வாரியக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் தெரிவிக்கப்பட்ட ஒவ்வொரு பொருள் தொடர்பாக, விரிவாக விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் டி.என்.வெங்கடேசன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை செயலாளர் டாக்டர் இரா. செல்வராஜ், போக்குவரத்து துறை முதன்மைச் செயலாளர் சுஞ்சோங்கம் ஜடக் சிரு பொதுப்பணித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. மங்கத் ராம் சர்மா, தொழில் துறை, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வணிகத் துறையின் முதன்மைச் செயலாளர் வி. அருண் ராய், தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு கழகத்தின் (SIPCOT) மேலாண்மை இயக்குநர் டாக்டர் K.செந்தில்ராஜ், நிதித்துறை இணைச் செயலாளர் ராஜகோபால் சுங்கரா , கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலாளர் டாக்டர் என்.சுப்பையன், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் எம்.அன்பரசன், தமிழ்நாடு & புதுச்சேரி கடற்படை உயர் அதிகாரி கமாண்டர் சவராட் மாஹோன், கடலோர காவல் டி.ஐ.ஜி. பி. முருகன் (TN Coast Guard), சுங்கத்துறை கண்காணிப்பாளர் சி.ஆர்.சுப்பராவ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மடுவை அ.துரை
செப்டம்பர் 30 (2020)

தனது இளமைப் பருவம் தொட்டே கழகப் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்.

தென்சென்னை மாவட்டம், சைதை பகுதிக் கழகச் செயலாளராகவும், பகுதி அவைத்தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களை முன்னெடுத்து நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.